**S.S.L.C. GOVT. PUBLIC EXAMINATION – MAY /2022**
**SCIENCE – TENTATIVE KEY ANSWER**

| Q.No. | Answer | Marks |
|---|---|---|
| | **பகுதி - I (மதிப்பெண்கள் 12)** | |
| 1 | (இ) 2f | 1 |
| 2 | (இ) ஒத்த அணு மூலக்கூறு | 1 |
| 3 | (அ) 2 | 1 |
| 4 | (இ) 2.4A | 1 |
| 5 | (அ) 95.5% | 1 |
| 6 | (ஆ) தண்டு | 1 |
| 7 | (இ) 2 | 1 |
| 8 | (அ) உற்பத்தி செல் | 1 |
| 9 | (ஆ) பிட்யூட்டரி சுரப்பி | 1 |
| 10 | (ஈ) கோதுமை | 1 |
| 11 | (ஆ) (1) – (iii), (2) – (iv), (3) – (i) , (4) – (ii) | 1 |
| 12 | (M) வால்டேயர் - குரோமோசோம்கள் | 1 |
| | **பகுதி – II**<br>**(எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் - மதிப்பெண்கள் 7x2=14)** | |
| 13 | **நியூட்டனின் இரண்டாம் விதி.**<br>➢ பொருள் ஒன்றின் மீது செயல்படும் விசையானது அப்பொருளின் உந்த மாறுபாட்டு வீதத்திற்கு நேர்த்தகவில் அமையும்.<br>➢ மேலும் இந்த உந்த மாறுபாடு விசையின் திசையிலேயே அமையும். | 2 |
| 14 | **எதிரொலியின் பயன்கள். (ஏதேனும் இரண்டு)**<br>➢ சில விலங்குகள் வெகு தொலைவில் உள்ளபோது தங்களுக்குள் தொடர்பு கொள்ளவும், ஒலி சமிக்ஞைகளை அனுப்பி அதிலிருந்து வரும் எதிரொலி மூலம் எதிரிலுள்ள பொருட்களைக் கண்டறிய பயன்படுகின்றன.<br>➢ எதிரொலித் தத்துவம் மகப்பேறியல் துறையில் அல்ட்ரா சோனோ கிராபி கருவியில் பயன்படுகிறது.<br>➢ இதைப் பயன்படுத்தி தாயின் கருப்பையில் உள்ள கருவின் வளர்ச்சியினை ஆராய்ந்தறியப் பயன்படுகிறது.<br>➢ இந்தக் கருவி மிகவும் பாதுகாப்பானது ஏனெனில் இதில் தீங்கு விளைவிக்கும் கதிர்கள் எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை.<br>➢ ஊடகங்களில் ஒலியின் திசைவேகத்தைக் கண்டறியவும் எதிரொலி பயன்படுகிறது,. | 1<br>1 |
| 15 | **பாயில் விதி.**<br>➢ மாறா வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தம் அவ்வாயுவின் பருமனுக்கு எதிர்த்தகவில் அமையும்.<br>➢ $P \alpha 1/V$ அதாவது $PV =$ மாறிலி | 2 |
| 16 | (see table below) | 4X1/2= 2 |

| சேர்மம் | வினை செயல் தொகுதி | பின்னொட்டு |
|---|---|---|
| ஆல்கஹால் | - OH | ஆல் |
| ஆல்டிஹைடு | - CHO | ஏல் |
| கீட்டோன் | -C=O | ஒன் |
| கார்பக்சிலிக் அமிலம் | -COOH | ஆயிக் அமிலம் |

| Q.No. | Answer | Marks |
|---|---|---|
| 17 | **மழைநீர் சேமிப்பின் முக்கியத்துவங்கள். (எவையேனும் இரண்டு)**<br>➢ மழைநீர் சேகரிப்பு மிக வேகமாகக் குறைந்துவரும் நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கப் பயன்படுகிறது.<br>➢ பெருகிவரும் நீர்த் தேவைகளை சமாளிக்கப் பயன்படுகிறது.<br>➢ பெரு வெள்ளம் மற்றும் மண் அரிப்பைத் தடுக்கப் பயன்படுகிறது.<br>➢ நிலத்தடியில் சேகரிக்கப்படும் நீர் மனித மற்றும் விலங்கு கழிவுகளால் மாசடைவதில்லை. எனவே இதனை குடிநீராகப் பயன்படுத்த முடியம். | 2 |
| 18 |  | 4X1/2= 2 |


Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

<table>
<tr><td></td><td>A – கேப்சூல் B- கார்டெக்ஸ் C – மெடுல்லா D – இரத்த குழல்கள்</td><td></td></tr>
<tr><td>19</td><td>பரிணாமம்.<br>➢ பரிணாமம் என்பது கால மாற்றத்திற்கு ஏற்ப உயிரினங்களில் படிப்படியாகத் தோன்றிய மாற்றங்கள் ஆகும்.<br>பரிணாமக் கோட்பாடுகளை முன்மொழிந்தவர்கள்.<br>➢ டார்வின் – இயற்கைத் தேர்வுக் கோட்பாடு<br>➢ ஜீன் பாப்டிஸ்ட லாமார்க் – பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை கோட்பாடு.</td><td>1<br>1</td></tr>
<tr><td>20</td><td>லைசின் அமினோ அமிலம் செறிந்த மக்காச்சோளங்கள். (இரண்டு)<br>➢ புரோட்டினா,<br>➢ சக்தி மற்றும்<br>➢ ரத்னா</td><td>1<br>1</td></tr>
<tr><td>21</td><td>இதய வால்வுகளின் முக்கியத்துவம்.<br>➢ இதய வால்வுகள் தசையால் ஆன சிறு மடிப்புகள் ஆகும். இவை இரத்த ஓட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கு உதவுகின்றன.<br>➢ இரத்தமானது ஒரே திசையில் செல்வதையும் மற்றும் பின்னோக்கி வருவதைத் தடுக்கவும் உதவுகிறது.</td><td>1<br>1</td></tr>
<tr><td>22</td><td>கட்டாய வினா.<br>கொடுக்கப்பட்டவை.<br>கிட்டப்பார்வை குறைபாட்டினால் காண இயலும் தூரம் (x) = 4மீ<br>காண விரும்பும் தூரம் (y) = 20மீ<br>கேட்கப்பட்டவை.<br>பயன்படுத்தப்படவேண்டிய குழி லென்சின் குவியத் தொலைவு f = ?<br>தீர்வு.<br>f = xy/x-y<br>= 4x20 / 4-20 = 80 /-16 = -5மீ</td><td>1<br>1</td></tr>
<tr><td colspan="3">பகுதி - III<br>(எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் - மதிப்பெண்கள் 7x4=28 )</td></tr>
<tr><td>23</td><td>நிறை மற்றும் எடை வேறுபாடு
<table>
<tr><th>நிறை</th><th>எடை</th></tr>
<tr><td>➢ பொருளில் அடங்கியுள்ள பருப்பொருளின் அளவு.<br>➢ இதன் அலகு கிலோகிராம்.<br>➢ இடத்திற்கு இடம் மாறுபடும்<br>➢ வில்தராசைக் கொண்டு அளக்கலாம்</td><td>➢ பொருளின்மீது செயல்படும் புவியீர்ப்பு விசையின் மதிப்பு<br>➢ இதன் அலகு நியூட்டன்<br>➢ இடத்திற்கு இடம் மாறுபடாது<br>➢ இயற்பியல் தராசு கொண்டு அளக்கப்படும்.</td></tr>
</table></td><td>1<br>1<br>1<br>1</td></tr>
<tr><td>24</td><td>ஒளியின் பண்புகள். (எவையேனும் நான்கு)<br>➢ ஒளி என்பது ஒருவகை ஆற்றல்<br>➢ ஒளி எப்போதும் நேர்கோட்டில் செல்கிறது.<br>➢ ஒளி பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை. வெற்றிடத்தில் கூட ஒளி பரவும்.<br>➢ காற்றில் அல்லது வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் C = $3X10^8$மீ/வி<br>➢ ஒளியானது அலைவடிவத்தில் செல்வதால் அது, அலைநீளம், அதிர்வெண் போன்ற பண்புகளைப் பெற்றிருக்கும்.<br>➢ ஒளியின் வெவ்வேறு நிறங்கள் வெவ்வேறு அலைநீலங்களைப் பெற்றிருக்கும்.<br>➢ கண்ணிற்கு தெரியும் ஒளியில் ஊதாநிறம் குறைந்த அலைநீளத்தையும் சிவப்பு நிறம் அதிக அலைநீலத்தையும் பெற்றிருக்கும்.<br>➢ ஒளி இருவேறு ஊடகங்களின் இடைமுகப்பை அடையும்போது பகுதியளவு எதிரொளிக்கும், பகுதியளவு விலகல் அடையும்.</td><td>1<br>1<br>1<br>1</td></tr>
<tr><td>25</td><td>இசையரங்கங்களின் மேற்கூரை – வளைவாக இருப்பது.<br>➢ வளைவான பரப்புக்களில் ஒலி எதிரொலிக்கும்போது அதன் செறிவில் மாற்றம் ஏற்படும்.</td><td>1<br>1<br>1</td></tr>
</table>

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | ➢ உட்புறம் குழிவான பகுதிகளில் எதிரொலிக்கும்போது செறிவு அதிகரிக்கும்.<br>➢ இசையரங்கங்களில் கூரைகள் வளைவாக இருப்பதால்<br>➢ இவற்றில் எதிரொலிக்கும் ஒலியானது சுவரில் எங்கு மோதினாலும் ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளியில் குவிக்கப்படுகிறது.<br>➢ இதனால் இதனுள் அமர்ந்து ஒருவர் மெல்லிய குரலில் பேசினாலும், மீண்டும் மீண்டும் எதிரொலித்து அரங்கத்தில் அமர்ந்திருக்கும் அனைவரின் செவியையும் அடையும். | 1 |
| *26* | ***அ) உலோகக் கலவை***<br>➢ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உலோகங்கள் அல்லது உலோகங்களும் , அலோகங்களும் சேர்ந்த ஒருபடித்தான கலவையே உலோகக் கலவை ஆகும்.<br>***ஆ) உலோகக் கலவை உருவாக்குவதற்கான காரணங்கள்.***<br>➢ நிறம் மற்றும் வடிவங்களை மாற்றியமைக்க<br>➢ வேதிப்பண்புகளை மாற்றியமைக்க<br>➢ உருகுநிலையைக் குறைக்க<br>➢ கடினத் தன்மை மற்றும் இழுவிசையை அதிகரிக்க<br>➢ மின்தடையை அதிகரிக்க | 2<br>2 |
| *27* | | 1<br>1<br>1<br>1 |
| *28* | ***அ) சுவாச ஈவு***<br>சுவாசித்தலின்போது வெளியேற்றப்பட்ட கார்பன் டை ஆக்ஸைடின் அளவிற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆக்ஸிஜன் அளவிற்கும் இடையேயுள்ள விகிதமே சுவாச ஈவு எனப்படும்.<br>சுவாச ஈவு = வெளியிடப்படும் $CO_2$ அளவு / எடுத்துக்கொள்ளப்படும் $O_2$ அளவு<br>***ஆ) ஒளிச்சேர்க்கையின் ஒட்டுமொத்த சமன்பாடு.***<br>$6CO_2 + 12H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{சூரியஒளி}} C_6H_{12}O_6 + 6H_2O + 6O_2$<br>கார்பன் டை ஆக்ஸைடு + நீர் → குளுக்கோஸ் + நீர் + ஆக்ஸிஜன் | 2<br>2 |
| *29* | ***அ) நீராவிப்போக்கு நடைபெறும் நிகழ்வு.***<br><br>நீராவிப் போக்கு நடைபெறும் நிகழ்ச்சி<br>***ஆ) துகள்களுடைய செல்கள்***<br> | 2<br>2 |
| *30* | ***அ) உயிரினங்களின் தோற்றம் பற்றிய கோட்பாடுகள்.***<br>➢ சிறப்புத் தோற்றக் கோட்பாடு<br>➢ சுய படைப்புக் கோட்பாடு<br>➢ உயிர்ப் பிறப்புக் கோட்பாடு<br>➢ வேற்றுக் கிரக அல்லது காஸ்மிக் தோற்றம்<br>***ஆ) வட்டார இன தாவரவியல் – அறிமுகப்படுத்தியவர்***<br>➢ ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் அப்பகுதியில் உள்ள மக்களுக்கு வழி வழியாக எவ்வாறு பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிவதாகும்.<br>➢ வட்டார இன தாவரவியல் என்னும் சொல்லை *J.W.*ஹார்ஸ்பெர்கர் | 2<br>2 |

Padasalai.Net

| | | |
|---|---|---|
| | அறிமுகப்படுத்தினார். | |
| 31 | ***மருத்துவத் துறையில் உயிர் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவம்.***<br>டி.என்.ஏ மாற்றுத் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள மருத்துவப் பொருட்கள்<br>➢ இரத்த சர்க்கரை நோய் சிகிச்சைக்கான இன்சுலின்<br>➢ வளர்ச்சி குறைபாடுள்ள குழந்தைகளின் குறைபாட்டினை நீக்கும் மனித வளர்ச்சி ஹார்மோன்<br>➢ ஹீமோஃபிலியா என்ற இரத்த உறைதல் குறைபாட்டு நோய்க் கட்டுப்பாட்டிற்கான இரத்த உறைதல் காரணிகள்<br>➢ திசு பிளாஸ்மினோஜன் தூண்டி, இரத்தக் கட்டிகளைக் கரைத்து இதய அடைப்பைத் தவிர்க்க உதவுகிறது.<br>➢ ஹெப்பாடிடிஸ் *B* மற்றும் வெறிநாய் கடி நோயைத் தடுக்கும் தடுப்பூசிகள். | 4x1=4 |
| 32 | A என்ற நீல நிற படிக உப்பை வெப்பப்படுத்தும்போது நீரை இழந்து B ஆக மாறுகிறது.<br>**$CuSO_4.5H_2O \rightarrow CuSO_4 + 5H_2O$**<br>B யில் நீரைச் சேர்க்கும்போது B மீண்டும் A ஆக மாறுகிறது.<br>**$CuSO_4 + 5H_2O \rightarrow CuSO_4 .5H_2O$**<br>எனவே - **A என்பது காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்**<br>**B என்பது நீரற்ற காப்பர் சல்பேட்** | 2<br>2 |
| | **பகுதி – *IV***<br>***(அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 3x7=21)*** | |
| 33 (அ) | ***(i) மின்னோட்டம்***<br>➢ உயர் மின்னழுத்தத்திலிருந்து தாழ் மின்னழுத்தத்திற்கு பாயும் எலக்ட்ரான்களின் ஓட்டமே மின்னோட்டம் ஆகும்.<br>***(ii) மின்னோட்டத்தின் அலகு.***<br>➢ மின்னோட்டத்தின் அலகு ஆம்பியர் ஆகும். இது *I* என்ற எழுத்தால் குறிக்கப்படுகிறது.<br>***வரையறை.***<br>➢ ஒரு கூலூம் மின்னூட்டம் ஒரு வினாடி நேரத்தில் கடத்தியின் ஏதாவது ஒர குறுக்குவெட்டுப் பகுதி வழியாக கடந்து செல்லும்போது அக்கடத்தியில் பாயும் மின்னோட்டம் ஒரு ஆம்பியர் *(A)* ஆகும்.<br>*(iii)*<br>➢ மின்னோட்டத்தை அளக்க அம்மீட்டர் பயன்படுகிறது.<br>➢ அம்மீட்டரை மின்சுற்றில் தொடரிணைப்பில் இணைக்க வேண்டும். | 2<br>3<br>2 |
| ஆ) | ***(i) இயற்கைக் கதிரியக்கத்தைக் கண்டறிந்தவர்.***<br>➢ இயற்கைக் கதிரியக்கத்தைக் கண்டறிந்தவர் ஹென்றி பெக்கொரல்.<br>*(ii)*<br>**இயற்கை கதிரியக்கம்** / **செயற்கைக் கதிரியக்கம்**<br>அணுக்கருவின் தன்னிச்சையான சிதைவு நிகழ்வாகும். / இது அணுக்கருவின் தூண்டடப்பட்ட சிதைவு நிகழ்வாகும்<br>ஆல்பா, பீட்டா மற்றும் காமாக் கதிர்கள் உமிழப்படுகின்றன. / பெரும்பாலும் அடிப்படைத் தகள்களான நியூட்ரான், பாசிட்ரான் போன்ற துகள்கள் உமிழப்படுகின்றன.<br>இது தன்னிச்சையான நிகழ்வு / இது தூண்டடப்பட்ட நிகழ்வு<br>இவை பொதுவாக 83 ஐ விட அதிக அணு எண் கொண்ட தனிமங்களில் நடைபெறுகிறது. / இவை பொதுவாக 83ஐ விட குறைவான அணு எண் கொண்ட தனிமங்களில் நடைபெறுகிறது.<br>இதனைக் கட்டுப்படுத்த முடியாது / இதனைக் கட்டுப்படுத்த முடியும்.<br>***(iii) வேளாண்மைத் துறையில் கதிரியக்க ஐசோடோப்புக்களின் பயன்கள்.***<br>➢ கதிரிக்க பாஸ்பரஸ் $P^{32}$ பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்க பயன்படுகிறது.<br>➢ பயிர்கள் உட்கவர்ந்துள்ள பாஸ்பரசின் அளவை அறிய உதவுகிறது.<br>➢ கதிரிக்க ஐசோடோப்புகள், வேளாண் விளைபொருட்களில் பூச்சிகள் மற்றும் ஒட்டுண்ணிகளால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கின்றன.<br>➢ கதிரியக்கத்தை பயன்படுத்துவதால் சேமிக்கப்படும் தானியங்கள் புதுத்தன்மையுடன் காக்கப்படுகிறது. | 1<br>3<br>3 |


Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | ➢ வெங்காயம் உருளைக் கிழங்கு ஆகியவற்றை அழுகிப்போகாமல் பாதுகாக்கிறது.<br>➢ பருப்பு வகைத் தானியங்கள் சேமிப்புக் காலத்தில் முளைவிடாமல் பாதுகாக்கிறது | |
| *34 (அ)* | ***(i) அணுக்கட்டு எண்***<br>➢ ஒரு மூலக்கூறில் உள்ள அணுக்களின் எண்ணிக்கையே அதன் அணுக்கட்டு எண் எனப்படும்.<br>➢ எ.கா. ஆக்சிஜன் மூலக்கூறில் ($O_2$) இரண்டு ஆக்சிஜன் அணுக்கள் உள்ளன எனவே ஆக்சிஜனின் அணுக்கட்டு எண் இரண்டு<br>***(ii) அணுக்கள் மற்றும் மூலக்கூறுகளுக்கிடையே உள்ள வேறுபாடு.*** | 2<br>5 |

| அணுக்கள் | மூலக்கூறுகள் |
|---|---|
| ➢ ஒரு தனிமத்தின் மிகச்சிறிய பகுதி அணு ஆகும்.<br>➢ மந்த வாயுக்களைத் தவிர ஏனைய அணுக்கள் தனித்த நிலையில் இருப்பதில்லை<br>➢ மந்த வாயுக்களைத் தவிர ஏனைய அணுக்கள் வினைத்திறன் மிக்கவை.<br>➢ அணுக்களில் வேதிப் பிணைப்புகள் இல்லை | ➢ தனிமம் அல்லது சேர்மத்தின் மிகச் சிறிய பகுதி மூலக்கூறு ஆகும்.<br>➢ மூலக்கூறுகள் தனித்த நிலையில் இருக்கும்<br>➢ மூலக்கூறுகள் வினைத்திறன் குறைந்தவை<br>➢ மூலக்கூறுகளில் வேதிப் பிணைப்புகள் உள்ளன |

| | | |
|---|---|---|
| *34 (ஆ)* | ***(i) சேர்க்கை வினை***<br>➢ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வினைபடு பொருள்கள் இணைந்து ஒரு சேர்மம் உருவாகும் வினை சேர்க்கை வினை எனப்படும்.<br>***(ii) சேர்க்கை வினை – எடுத்துக்காட்டு***<br>➢ ஹைட்ரஜன் வாயு குளோரினுடன் வினைபுரிந்து ஹைட்ரஜன் குளோரைடு வாயுவைத் தரும்.<br>➢ $H_2 + Cl_2 \rightarrow 2HCl$<br>***(iii) மீள் மற்றும் மீளா வினைகள்.*** | 2<br>2<br>3 |

| மீள் வினை | மீளா வினைகள் |
|---|---|
| ➢ மீள்வினைகள என்பவை மீண்டும் நிகழக்கூடிய வினைகள் ஆகும். அதாவது வினைவிளை பொருள்களை வினைபடு பொருள்களாக மாற்ற முடியும்.<br>➢ இது முன்னோக்கு மற்றும் பின்னோக்கு ஆகிய இரண்டு திசைகளிலும் நடைபெறும்.<br>➢ எ.கா. $PCl5 \rightarrow PCl3 + Cl_2$ | ➢ ஒரு வினையில் வினைபடு பொருள்களை மீண்டும் பெற இயலாத வினை "மீளா வினை" எனப்படும்.<br>➢ எ.கா. $C + O_2 \rightarrow CO_2$<br>➢ இவ்வினையில் உருவான கார்பன்டை ஆக்சைடு, மீண்டும் நிலக்கரியாக மாற இயலாது. எனவே இது மீளா வினை எனப்படும். |

| | | |
|---|---|---|
| *35 (அ)* | ***(i) செயற்கை ஆக்சின்கள்.***<br>➢ ஆக்சின்களை ஒத்த பண்புகளைக் கொண்ட செயற்கையாகத் தயாரிக்கப்படும் ஆக்சின்கள் செயற்கை ஆக்சின்கள் எனப்படும்.<br>➢ எ.கா. 2,4 D (2,4 டை குளோரோ பீனாக்சி அசிட்டிக் அமிலம்)<br>➢ இன்டோல் 2 பியூட்ரிக் அமிலம் (IBA)<br>➢ நாப்தலின் அசிட்டிக் அமிலம் (NAA)<br>➢ 2,4,5 –T ( 2,4,5 – ட்ரை குளோரோ பீனாக்சி அசிட்டிக் அமிலம்.<br>***(ii) மூவிணைவு.***<br>➢ தாவரங்களில் கருவுறுதலின்போது மகரந்தக் குழல் இரண்டு ஆண் கேமிட்டுகளை சூலினுள் செலுத்துகிறது.<br>➢ ஒரு ஆண் கேமிட் அண்டத்துடன் இணைந்து கருவை உண்டாக்குகிறது.<br>➢ மற்றொரு ஆண் கேமிட் இரண்டாம் நிலை உட்கருவுடன் இணைந்து மூன்று | 2<br>3<br>2 |


Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| | உட்கருக்கள் கொண்ட கருவூண் திசுவை உருவாக்குகிறது.<br>➢ இந்த இணைவு மூவிணைவு எனப்படும். 1n + 2n = 3n<br>***(iii) ஆண்களில் இரண்டாம் நிலை பால் உறுப்புக்கள்.***<br>➢ விந்துக் குழல், எபிடிடைமிஸ் (விந்தணு முதிர்ச்சிப் பை), விந்துப்பை (செமினல் வெசிக்கிள்), புராஸ்டேட் சுரப்பி (முன்னிலைச் சுரப்பி), ஆண்குறி (பீனிஸ்) | |
| 35 (ஆ) | ***(i) மெண்டல் தன் ஆய்விற்கு தோட்டப் பட்டாணிச் செடியைத் தேர்ந்தெடுத்ததன் காரணம்.***<br>➢ இதில் இயற்கையாகவே தன்மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதால், தூய தாவரங்களைப் பெருக்கம் செய்வது எளிது.<br>➢ இது ஓராண்டு தாவரமாக இருப்பதால் வாழ்க்கைக் காலம் மிகக் குறுகியது. எனவே குறுகிய காலத்தில் வல தலைமுறைகளை விரைவில் அறிந்து கொள்ளலாம்.<br>➢ இதில் அயல் மகரந்தச்சேர்க்கை செய்வது மிகவும் எளிது.<br>➢ ஆழமாக வரையறுக்கப்பட்ட பல வேறுபட்ட பண்புகளைக் கொண்டுள்ளது.<br>➢ மலர்கள் அனைத்தும் இருபால் தன்மை கொண்டவை<br>***(ii) மது அருந்துபவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை சரி செய்வதற்கான தீர்வு.***<br>***கல்வி மற்றும் ஆலோசனை.***<br>➢ கல்வி மற்றும் ஆலோசனைகள், மது அருந்துபவர்கள் தங்கள் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தை எதிர்கொண்டு அவற்றிலிருந்து விடுபடவும், வாழ்க்கையின் தோல்விகளை ஏற்றுக்கொள்ளவும் உதவும்.<br>***உடல் செயல்பாடுகள்.***<br>➢ மறுவாழ்வை மேற்கொள்ளும் நபர்கள், நூல்கள் வாசித்தல், இசை, விளையாட்டு, யோகா, மற்றும் தியானம் போன்ற நலமான செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.<br>***பெற்றோர்கள் மற்றும் சக மனிதர்களிடம் உதவியை நாடுதல்.***<br>➢ பெற்றோர்கள் மற்றும் சக மனிதர்களிடம் உதவி மற்றும் வழிகாட்டுதலை பெறுதலால், பதட்டமான உணர்வுகள், தவறான செயல்களைக் குறித்து பேசுவதன் மூலம் அத் தவறுகளைச் செய்யாமல் தங்களைத் தடுத்துக்கொள்ள உதவும். | |

**Prepared By.**
**S.Arockiam B.T.Asst.**
**S.I(BMS)H.S.S,Valoothoor,**
**Thanjavur Dt.**
**9443798666**


Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com